REGD: No. M. 6311

PHONE No: 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 268

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரு. 24—0—0
6 மாதம் ரு. 12—0—0
3 மாதம் ரு. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரு. 30—0—0
6 மாதம் ரு. 15—0—0
3 மாதம் ரு. 7—8—0

சென்னை: சித்திரை 12உ சனி (24—4—54) ★ ★ ★ வெளியீடு: சித்திரை 13உ ஞாயிறு (25—4—54)

உ. பி. ஆரியவர்த்தத்தின் உயிராம்!

இன்று இந்தியாவின் இருதயமாம்!

வேத காலத்திலிருந்து கிடைத்துள்ள கலைப் பண்பாம்!

உத்திர பிரதேசத்தை இரண்டாக்க முயலுவது இந்தியாவுக்கே செய்யும் கேடாம்!

முதல் மந்திரி பண்டிட் பந்த் முகாரி

"மண்ணில் உள்ள எந்த சக்தியாலும் கங்கையும் யமுனையும் பாய்ந்தோடும், கிருஷ்ணனுக்கும் இராமனுக்கும் சொந்தமான, இந் நிலப்பரப்பைப் பிளந்துவிட முடியாது. பிளக்க முடியாதபடி இயற்கையால் உருவாக்கப்பட்டுள்ள வேத காலத்திலிருந்து நமது பண்பாடு நமக்குக் கிடைத்திருக்கிறது. சென்ற காலத்தில் ஆரிய வர்த்தத்தின் ஆத்மாவாக நாம் இருந்தோம். இந்தியாவின் இருதயமாக நாம் இப்பொழுதும் தொடர்ந்து இருக்கிறோம்."

"உத்திரப் பிரதேசத்தைத் துண்டாடுவது என்பது இந்தியாவிற்கு இழைக்கப்படுகிற துரோகச் செயலாகும்."

இவ்வாறு, உத்திரப் பிரதேச முதல் மந்திரியான பண்டிட் கோவிந்த வல்லப பந்த் காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறுவதின் மூலம், உத்திரப் பிரதேசத்தை இரண்டு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் எனக் கோருபவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மாநில திருத்த குழுவின் முன், உத்திரப்பிரதேச சட்ட சபை உறுப்பினர்களில் நூறு பேருக்கு அதிகமாக, உத்திரப் பிரதேசத்தை இரண்டாக்க வேண்டும் என மனுக் கொடுத்திருக்கின்றனர். அதன் எதிரொலியே பண்டிட் பந்தின் முகாரி.

தெலிங்கானா பிரதேசம்

ஆந்திராவில் இணையும்?

புதுடில்லி, ஏப். 22—

ஹைதராபாத் மாநிலத்தைப் பிளந்து, தெலிங்கானா பிரதேசத்தை ஆந்திராவில் மொழிவாரி அடிப்படையில் சேர்க்குமாறு ஆந்திர, தெலிங்கானா கம்யூனிஸ்டு கட்சிக் கமிட்டிகள் மாநில புனரமைப்பு கமிஷனிடம் சமர்ப்பித்துள்ள கூட்டு மகஜரில் வற்புறுத்தியுள்ளன.

விபரீதச் செயலுக்குப் பின்னர் வியாக்கியானம்!

கொழும்பு, ஏப் 23—

இந்தோ-சீனாவுக்கு பிரெஞ்சு 'பாரசூட்' துருப்புகளை ஏற்றிச் செல்லும் அமெரிக்க இராணுவ விமானங்கள் இலங்கை வழியாகச் செல்ல அனுமதித்துள்ளதாக இலங்கை சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டது.

பரம இரகசியமாக அமெரிக்க விமானங்கள் நீர்கொழும்பு இராணுவ விமான நிலையத்தின் வழியாக சென்று 8 மணி நேரத்துக்குப் பின்னரே சர்க்கார் அறிக்கை வெளியிட்டது.

இந்தியாவும், பர்மாவும் அவ் விமானங்கள் தங்களுடைய நாடுகள் வழியாகச் செல்ல அனுமதி மறுத்துவிட்டன.

மூன்று போலீசுக்கும் ஆறு தொழிலாளருக்கும் படுகாயம்

13 பேர்களை நீக்கினதற்குத் தொழிலாளர்களின் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

இந்தூர், ஏப். 23—

மூன்று போலீஸ் சிப்பாய்களுக்கும் ஆறு தொழிலாளர்களுக்கும் படுகாயம் ஏற்பட்டுள்ளது. போலீஸ் தடியடிப் பிரயோகம் வேறு நடந்திருக்கிறது. ஆலைப் பகுதியில் 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இங்குள்ள ஆலை ஒன்றில் 13 ஊழியர்களை, ஆலை நிர்வாகம் வேலையிலிருந்து நீக்கி விட்டது. அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரவில் பாதுகாப்பு செய்து வரும் போலீஸ் சிப்பாய்கள் மீது யாரோ சில கருங்காலிகள் கற்களை வீசினர். அதன் எதிரொலியாக பலருக்குக் காயமேற்பட்டது. போலீஸ் தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது.

தூத்துக்குடி வழக்கு

முதன் மந்திரியிடம் மகஜர்

சென்னை, ஏப். 23—

தூத்துக்குடி சதிவழக்கையும், இராமநாதபுரம் சதிவழக்கையும் வாபஸ் பெறுமாறு தமிழ் நாடு தொழிற்சங்க காங்கிரஸ் சென்னை முதன் மந்திரியிடம் சமர்ப்பித்த ஒரு மனுவில் கேட்டுக் கொண்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் பைசலாகாமலிருக்கும் வழக்குகளையும் வாபஸ் பெறுமாறு மேலும் அம்மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

அறுவை மருத்துவத்தில் ஒரு அரிய சாதனை!

பெண்ணின் வயிற்றிலிருந்து 54 பவுண்ட் சதை அகற்றப்பட்டது

சிகந்திராபாத், ஏப் 22—

40 வயதுடைய பெண்ணின் வயிற்றிலிருந்து 54 பவுண்ட் எடையுள்ள சதைப் பெருக்கை வெற்றிகரமாக அறுத்து எடுக்கப்பட்டுள்ளது. அறுவை மருத்துவத்தில் இது ஒரு அரிய சாதனை என்று சொல்லப்படுகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக, இச்சதை வளர்ச்சியின் காரணமாக அப்பெண் அவதிப்பட்டுக் கிடந்தாள்.

'குளோரோபார்ம்' கொடுத்து முழு மயக்கமுறச் செய்தால் பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படக் கூடுமெனக் கருதி, சாதாரண மயக்க மருந்துகளைக் கொடுத்தே அச்சதை அறுத்து எடுக்கப்பட்டது. டாக்டர் சி. எல். மோடி என்ற அறுவை மருத்துவர் இவ்வறுவையை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளார்.

ஜெர்மன் கம்பெனியுடன் டாடா ஒப்பந்தம்!

— (:) —

இந்தியாவில் டீசல் லாரிகள் தயாரிக்க!

பம்பாய், ஏப். 23—

ஜெர்மனியில் புகழ் பெற்ற மோட்டார் உற்பத்தி நிலையமான டைம்லர்-பென்ஸ் என்னும் கம்பெனியுடன், டாடா கம்பெனியானது ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு இருக்கிறது இதற்கு யூனியன் சர்க்கார் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டுக் கம்பெனிகள் உற்பத்தி செய்யும் லாரிகளுக்கு 'டாடா-மெர்செடெஸ் பென்ஸ்' எனப் பெயரிடப்படும் எனத் தெரிகிறது.

வியட்மினுவைத் தாக்க - ஐ. நா. சபை முன்வருமா?

— (:) —

இந்தோ-சீனாவைக் கொரியாவாக்க கம்போடியா வித்திடுகிறது

நியூயார்க், ஏப். 23—

ஐக்கிய நாடு சபையின் செயலாளரிடம், அமெரிக்காவில் உள்ள கம்போடிய தூதுவர், வியட்மினு துருப்புகள் கம்போடியா எல்லையில் நுழைந்து அக்கிரமம் செய்வதாகக் குற்றச்சாட்டு ஒன்றை கொடுத்திருக்கிறார்.

ஐ. நா. சபை ஏதாவது உடனடியான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று குறிப்பான வேண்டுகோள் ஒன்றையும் தாம் கொடுக்கவில்லையானாலும், அவ்வாறு கேட்டுக்கொள்ள தமக்குள்ள உரிமையை எதிர்காலத்திற்கு ஒதுக்கி வைத்திருப்பதாக அத்தூதுவர் அறிவித்துள்ளார்.

இந்தோ-சீனப் போர்

இறுதிக் கட்டம் நெருங்குகிறது

பாரிஸ், ஏப். 23—

டியன்பியன்பூவில் 650 கெஜ தூரத்திலுள்ள ஒரு கேந்திர இடத்தை கடுமையான போராட்டத்திற்குப் பின் பிரெஞ்சுத் துருப்புகள் காலி செய்ததாகத் தெரிகிறது. நேருக்கு நேர் இன்று நடந்த சண்டையைப் போல் இதற்கு முன் அங்கு நடைபெற்றதில்லையாம்.

டியன்பியன்பூவில் போர் இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டதாகவும், வியாழனன்று நடந்த மூர்க்கமான சண்டையில் இரு தரப்பிலும் ஏராளமான சேதம் ஏற்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியா — சோவியத் உறவு முறிந்தது

பெட்ரோவ் தம்பதிகள் விவகாரமே காரணம்

லண்டன், ஏப். 23—

ஆஸ்திரேலியாவில் உள்ள தூதுவர் நிலையத்தில் தொடர்பு கொண்டிருந்த பெட்ரோவ் தம்பதிகளுக்கு, ஆஸ்திரேலிய அரசாங்கம் அபயமளித்துக் காத்ததால், சோவியத் ரஷ்யா சீற்றம் கொண்டுள்ளது.

அதன் விளைவாக மாஸ்கோவில் உள்ள ஆஸ்திரேலிய தூதுவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளும்படி சோவியத் ரஷ்யா ஆஸ்திரேலியாவை கோரி இருக்கிறது. இதுபோலவே ஆஸ்திரேலியாவிலிருந்த தமது தூதுவர்களையும் ரஷ்யா திரும்ப அழைத்துக் கொண்டது. இதனால் இரு நாடுகளுக்குமிடையே இருந்துவந்த அரசியல் உறவு முறிந்துவிடக்கூடும்.

எண்ணெய் ஒப்பந்தம்

டெஹ்ரான், ஏப். 22—

எண்ணெய் தொழில் தேசிய மயச் சட்டப்படி எட்டு சர்வதேச கம்பெனிகளுடன் ஈரான் சர்க்கார் எண்ணெய் ஒப்பந்தம் செய்துகொள்ளுமென ஈரானிய பிரதமர் ஜெனரல் ஜாஹிதி தெரிவித்தார்.

நஷ்ட ஈடு போதாது!

சென்னை, ஏப். 23—

பர்மா நில தேசிய மயச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நஷ்டஈடு மிகக் குறைவாக உள்ளதென்றும், இது பர்மாவில் நிலமுடைய இந்தியர்களைப் பெரிதும் பாதிக்குமென்றும் கூறி, தென்னிந்திய வர்த்தக சபை நேருவுக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளது.

பா. நி. சபையைக் கலைக்க ஐக்கிய முன்னணி

கராச்சி, ஏப். 23—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை கலைக்கச் செய்ய கராச்சியில் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்க ஐக்கிய கமிட்டி போன்றை அமைப்பதென இங்கு நடைபெற்ற எதிர்க் கட்சி தலைவர்களின் கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—4—54 சனி

மாவுக்கேற்ற பண்டம்!

★

உலகின் பல பகுதிகளிலும் நடைமுறையில் இருந்துவரும் மக்களாட்சி அமைப்பில், பொதுமக்கள் இயல்பாகப் பெற்றுள்ள ஆட்சிப் பொறுப்பை, தேர்தல் காலத்தில் நயமாகப் பசப்பி, தமதாக்கிக் கொண்டு, பதவி பீடத்தைப் பிடித்து நின்று, முன்னாள் கொடுத்த வாக்குறுதியை மீறி, மக்களின் நலன்களை துச்சமாக மதித்து, எதேச்சாதிகார ஆட்சி புரியும் எத்தர்களின் கொட்டத்தை, இடையில் தட்டிக் கேட்க முடியாமல் ஏங்கிக் கிடக்கும், பொதுமக்களின் பரிதாப நிலை பற்றி நேற்று குறிப்பிட்டிருந்தோம். தங்களிடமுள்ள ஆட்சிப் பொறுப்பை தற்காலிகமாக சிலரிடம் ஒப்படைப்பது என்பது, நடைமுறையில் நிரந்தர காணிக்கையாக தாரை வார்த்துக் கொடுத்துவிட்டது போன்ற நிலை இருந்துவருகிறது என எடுத்துக் காட்டி இருந்தோம். இக்கேடினைக் களைய வேண்டுமானால், ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள மக்கள் பிரதிநிதிகள், வாக்குறுதியை மீறி நடக்கும்போதும் கணத்திலேயே, அவர்களை விரட்டியடிக்கும் அதிகாரமும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களிடம் இருந்தாக வேண்டும் என அறிவித்திருந்தோம். இவ்வேற்பாட்டால் மக்களை அலட்சியப்படுத்தியும், கொடுத்த வாக்குறுதியை மறந்தும், தான்தோன்றித்தனமாக ஆட்சி நடத்தும் துணிவு, ஆட்சியாளர்களுக்கு ஏற்படாது என்பது எதிர்பார்க்கக்கூடியதே. சொந்த இலாபத்திற்காக கட்சி மாறும் பச்சோந்தித்தனமும் அரசியல் உலகில் தலைகாட்டாது நிற்கும் என்பதும் ஓரளவு வெற்றிபெறக்கூடியதே.

ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற, மக்களுடைய உடைமை பாசப் பரவிக்கிடக்கும் ஆட்சிப் பொறுப்பை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள, தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும், தனி நபர்களும், அடிப்படை இலட்சியத்தில் மாறுபட்டுக்கிடந்தபோதிலும், அதை நிறைவேற்ற இருக்கும் அரசியல் ஏற்பாட்டை நிரந்தரமாகப் பாதுகாத்துவருவதில் ஒருமித்தக் கருத்துடையவர்களாக இருந்தாக வேண்டும். ஆட்சி பீடமேறும் வாய்ப்பு பெற்றதும், அவ்வாய்ப்பைத் தமது கட்சிக்குத் தேடித்தர அருந்துணையாக இருந்த, அடிப்படை அமைப்பை, தேவையான வகையில் திருத்தம் செய்யலாமேயல்லாது, மூல ஏற்பாட்டையே அறவே உருத்தெரியாமல் ஒழித்துவிடக் கூடாது. இம்முறை மக்களிடம் இயல்பாக உள்ளதாகச் சொல்லப்படும் ஆட்சிப் பொறுப்பை, குறிப்பிட்ட ஒரு கட்சி என்றென்றைக்கும் பறித்துக் கொண்டதாக முடியும்.

மரத்திலேயே முற்றிப் பழுத்தப் பழத்திற்கும், புகை போட்டு பழுக்கடித்த பழத்திற்கும் உள்ள ருசி பேதம் தான், தங்களுக்கு நலம் தரும் காரியத்தை மக்கள் ஒப்புவரோ எதிர்ப்பரோ என அஞ்சி, அவர்கள் ஒப்புதல் அறியும் அமைப்பை அழித்து, அவர்களுக்குள்ள வாய்ப்பை மறுத்து, நலம் பல செய்ய முற்படுவதில் உள்ளது.

மொத்த வாக்குகளில் 51 சத வாக்குகளைப் பெற்ற கட்சி ஆட்சி பீடத்தில் அமருவதும், 49 சதவிகித ஆதரவு பெற்ற கட்சி எதிர்கட்சியாக அமைவதும் மக்களாட்சி முறையில் சாதாரணமாக நிகழக் கூடிய சம்பவம். மொத்த வாக்காளர்களில் இருவரே இருவருடைய அதிக ஆதரவு தங்கள் கட்சிக்குக் கிடைத்துவிட்டக் காரணத்தால், எதிர் கட்சியினரை தங்களாட்சியின் எதிரிகளாகப் பாவித்து, எதிர் கட்சியினர் அறிவுரைகளை அலட்சியப்படுத்தி நடப்பது, ஆளும் கட்சிக்கு அழகாகாது. சிறந்ததோர் அரசியல் மரபை உருவாக்க, அது, உதவி செய்யவும் செய்யாது.

சர்வோதயபுரியில் பேசிய குடியரசு தலைவர் பிரசாத் அவர்கள், 'மக்களிடம் காணப்படும் குறைபாடுகள், அமைந்துள்ள அரசாங்கத்திலும் பிரதிபலிக்கும் எனக் கூறியுள்ளார். எத்தகைய அரசாங்கத்தைப் பெற மக்களுக்குத் தகுதி இருக்கிறதோ, அத்தகு அரசாங்கத்தைத்தான் மக்கள் பெறுவர் எனவும் தெரிவித்துள்ளார். மக்களின் நலம் பேணாத அரசாங்கம் அதிக காலம் ஆட்சிப் பொறுப்பில் இருக்க முடியாது எனவும் தலைவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இவை கருத்தத்தக்கவை. இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெறும் தேர்தல்கள் அனைத்திலும் போட்டியிடும் பெரும்பான்மையினர், தம் அரசியல், சமூக இயல், பொருள் இயல் கொள்கைகளை மக்கள்முன் வைப்பதைக் காட்டிலும், சொந்த ஜாதி, சமயம், மதம் முதலியவைகளையே மக்கள்முன் எடுத்துக் கூறி, மக்கள் ஆதரவு தேடும் நிலையில் உள்ளனர். இத்துடன் நிற்காமல், புராண இதிகாசங்களையும், ஆண்டவன் அவதார பெருமைகளையும், மக்கள் வாக்குகளை பெறும் கருவூலங்களாகவும் உபயோகிக்கின்றனர்.

இன்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள காங்கிரசோ, மக்களின் வாக்குகளைப் பெற்றது திட்டங்களைக் காட்டி அல்லவே அல்ல. முன்னாள் செய்த தியாகத்தைக் காட்டியே யாகும்.

காங்கிரஸ் கட்சியினர் செய்த தியாகத்திற்குப் பரிசாகத் தான், பொது மக்கள் தங்களிடமுள்ள ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரசிடம் ஒப்படைத்துள்ளார்கள், இது முழுதும் மக்களாட்சி முறைக்கு ஒத்து இருப்பது எனச் சொல்வதற்கில்லை.

மக்களாட்சி முறைக்கு இன்றியமையாதவைகளாகத் தேவைப்படுவன, மக்களுக்குள்ள அரசியல் அறிவு வளர்ச்சி பெறுவதும், தங்கள் எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல் தங்களுக்கே இயற்கையாக அமைந்திருக்கிறது எனும் இரண்டுமேயாகும். இவ்விரு பண்புடைய மக்களைக் கொண்டுள்ள நாட்டில்தான், குடியரசுத் தலைவர் கூறும் மக்களாட்சி முறைப்படி மக்களுக்கு நலம் செய்யும் நல்லாட்சி அமைய முடியும். அதற்கான அரசியல் அறிவு பெற, மக்களை பண்படுத்துவதே மக்கள் எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரும், மேற்கொள்ள வேண்டிய பெரும் பணியாகும்.

தலைவர் கூறியதுபோல, தன் வல்லமை தெரியாது எதற்கும் ஆண்டவன் செயலென கும்பிட்டுக் கிடக்கும் நம்மவர்க்கு, தக்கதோர் ஆட்சியாக காங்கிரஸ் ஆட்சி அமைந்து இருப்பதில் ஆச்சரியமில்லை. அரசியல் உலகில் இருந்து காங்கிரஸ் கட்சி அகற்றப்பட்டாலன்றி, இந்தியத் துணைக் கண்டத்தில் மக்களாட்சி வேர்கொள்ளும் என்பது வெறும் ஆருடமேயாகும்.

தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

மேலும் 33 பகுதிகளுக்கு விஸ்தரிப்பு

புதுடில்லி, ஏப். 22—

இந்த ஆண்டிற்கு மேற்கொண்டு 33 தொழில் நகரங்களுக்கு தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் விஸ்தரிக்கப்படுமென்று தொழிலாளர் நல மந்திரி வி. வி. கிரி தெரிவித்தார்.

சென்னை மாநிலத்தில் கோவையிலும், அதன் சுற்றுப்புற தொழில் பகுதிகளிலும், திரு—கொச்சியில் ஆலவாய், எர்ணாகுளம், திருச்சூர், கொல்லம் ஆகிய இடங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலாளர் குடும்பங்களுக்கு வைத்திய வசதி விஸ்தரிக்க யோசனை செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டம் இப்பொழுது அமுலிலுள்ள பகுதிகளில் 1953 டிசம்பர் 21-ந் தேதி வரை மொத்தம் 1,56,000 பேருக்கு நன்மை கிடைத்திருக்கிறது.

தொழிலாளர் பிராவிடெண்ட் பண்டு சட்டத்தை அதன் ஷாராவில் கண்ட 6 தொழில்களை தவிர மற்ற தொழில்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

வெடி வகைகள் உற்பத்தி

இந்தியாவின் நிலைமை

புதுடில்லி, ஏப். 20—

இந்தியாவில் உள்ள தளவாட உற்பத்திசாலைகளில், பலதரப்பட்ட வெடி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது; இறக்குமதி செய்யப்பட்டுவரும் இதர ரகங்களையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது; புதிய ரகங்களைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள், போதிய வசதிகள் கிடைக்கப் பெற்ற பின்னரே மேற்கொள்ளப் படும்; வெடிவகைகள் உட்பட, இராணுவ சாதனங்களில் சுயதேவைப் பூர்த்தி நிலைமையை எய்துவதற்காக இடைவிடாது முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

ரயில்வே நிலையங்களில் பெண் வழிகாட்டிகள்!

புதுடில்லி, ஏப். 22—

ஆறு பிராந்திய ரயில்வேக்களில் — 18 ரயில்வே நிலையங்களில் பிரயாணிகளுக்கு உதவி புரிவதற்காக மொத்தம் 36 பெண் வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; தென்பிராந்திய ரயில்வேயில் 20 பெண் வழிகாட்டிகளும், மத்திய பிராந்திய ரயில்வேயில் 7 பெண் வழிகாட்டிகளும், வடக்குப் பிராந்திய ரயில்வேயில் 6 பெண் வழிகாட்டிகளும், மேற்கு, வடகிழக்கு, கிழக்கு பிராந்திய ரயில்வேக்களில் ஒவ்வொன்றிலும் ஒரு வழிகாட்டியும் உள்ளனர் என்றும் தெரியவருகிறது.

மாநிலங்களில் வீடு கட்டும் திட்டம்

ரூ. 6 கோடி அனுமதி

புதுடில்லி, ஏப். 23—

இடம் பெயர்ந்தோருக்கு வீட்டு வசதியளிப்பதற்காக 1953—54-ல் 18 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட வீடுகட்டும் திட்டங்களுக்கு மொத்தம் ரூ 6,23,29,700 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

டில்லிக்கு 2,80,90,000 ரூபாயும், மேற்கு வங்காளத்திற்கு 1,46,50,000 ரூபாயும் கிடைத்தன. வேறு 16 மாநிலங்களுக்கு இவைகளை விடக் குறைந்த தொகைகள் கொடுக்கப்பட்டன.

கி. வங்கத்தில் 'லட்சிய அமைச்சர் குழு!'

ஹக்கிற்கும் — சுகரவர்த்திக்கும் வாதப் பிரதிவாதம்

டாக்கா, ஏப் 22—

'ஒரு 'லட்சிய அமைச்சர் குழு' இன்னமும் கிழக்கு வங்கத்தில் ஏற்படாமல் இருப்பதற்குக் காரணம் சுகரவர்த்தியே காரணமாகும்' என முதல் மந்திரி பசலுல்ஹக் அறிவித்துள்ளார்.

உயர்ந்த மந்திரி சபை அமையாததற்கு கவர்னர்தான் காரணமென சுகரவர்த்தி குறைகூறியுள்ளார். அதை மறுத்து பசலுல்ஹக் 'இந்தத் தாமதத்திற்கெல்லாம் முழுப் பொறுப்பாளி தாம்தான்' என மறுத்துக் கூறியுள்ளார்.

சர்க்கரை உற்பத்தியை பெருக்கத் திட்டம்

8 புதிய தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி

புதுடில்லி, ஏப். 22—

ஆண்டுக்கு $4\frac{1}{2}$ லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய புது பாக்டரிகளை அமைப்பதின் மூலமும், தீவிரமாக சாகுபடி செய்து கரும்பு விளைச்சலை அதிகமாக்குவதின் மூலமும், நாட்டில் சர்க்கரை உற்பத்தியை பெருக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாக விவசாய மந்திரி டாக்டர் தேஷ்முக் மக்கள் சபையில் தெரிவித்தார்.

8 புது பாக்டரிகளை அமைக்க லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், சில இடங்களில் சர்க்கரை விலை ஏறுமுகமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சோஷலிஸ்டு தலைவர் மீது அவதூறு வழக்கு

திருச்சூர், ஏப் 22—

தமது அலுவல்களுக்கு அமெரிக்க ஸ்தாவனிடமிருந்து ரூ 12,000 பரிசு பெற்றதாகக் கூறியதை ஆட்சேபித்துக் கம்யூனிஸ்டு எதிர்ப்பு முன்னணி தலைவர் பிரதர் வேதக்கன் கேரள சோஷலிஸ்டு தலைவர் மத்தாய் மஞ்சூரான் மீது ஒரு அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

கிழக்கு வங்க அவாமி லீக்

முஸ்லீம் அல்லாதாரும் சேர வாய்ப்பு

கிழக்கு வங்கத்தில், முஸ்லீம் லீகை முறியடித்த அவாமி முஸ்லிம் லீக் இனி, முஸ்லீம்களுக்கு மட்டுமே சொந்தமான கட்சியாக இராது.

கட்சியை மேலும் விரிவுபடுத்தவும், ஜனநாயகத்தைப் புகுத்தவும், முஸ்லிம் அல்லாதாரையும், உறுப்பினராக்க முயற்சி நடக்கிறது. இதற்கு வழி செய்வதற்காக அவாமி முஸ்லிம் லீக், என்பதை மாற்றி, அவாமி லீக் என்று பெயரிட எண்ணியுள்ளனர்.

எதிர்க் கட்சிகளை ஒடுக்க

பாக். பஞ்சாபில் போலீஸ் திட்டம்

நூன் கைவரிசையாம்!

பாக். பஞ்சாபில் முஸ்லிம் லீகுக்கு எதிராக உள்ள எல்லா கட்சிகளையும், குறிப்பாக முற்போக்குக் கட்சிகளை எல்லாம் ஒழித்துக்கட்ட லீக் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது என்று, பாகிஸ்தான் டைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கிறது.

எதிர்க் கட்சிக் காரியாலயங்களைத் தாக்குவது, தலைவர்களின் மீது வழக்குகளை ஏவுவது ஆகிய முறைகள் கையாளப்படுமாம்.

உயர்தர போலீஸ் அதிகாரிகள் கூடி, இந்தத் திட்டத்தை வகுத்திருப்பதாகவும், பஞ்சாப் பிரதமர் பிரோஸ் கான் நூன் இதற்கான ஏற்பாட்டைச் செய்து வருவதாகவும் பாகிஸ்தான் டைம்ஸ் கூறுகிறது.

சாது குடிசையில் ஆயுதங்கள்!

மூன்று இளமங்கையரும் இருந்தனராம்

கோரக்பூரை அடுத்த தின்கோனியா என்ற இடத்தில், யாசகம் செய்து வாழும் ஒரு சாதுவின் குடிசையைப்போலீசார் சோதனை போட்டதில், நாலு துப்பாக்கிகளும், வெடிமருந்தும் கண்டு எடுத்தனர். மூன்று இளம் பெண்களும் அந்தக் குடிசையில் இருந்தனர்.

ஆயுதங்கள் யாவும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலுள்ள பலர் பேரால், ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தனவாம். சாது உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

3-லட்சம் டன் சர்க்கரை கொள்முதல்

புதுடில்லி, ஏப். 22—

இந்திய சர்க்கார் வெளிநாடுகளிலிருந்து மூன்று லட்சம் டன் சர்க்கரை கொள்முதல் செய்திருக்கிறார்கள். பிரிட்டன், கியூபா, ஸ்பெயின், பெரு, பார்மோசா ஆகிய இடங்களிலிருந்து இந்த சர்க்கரை வாங்கப்பட்டிருக்கிறது.

மதுவிலக்கிற்கு பெப்சு மந்திரி எதிர்ப்பு

பாடியாலா ஏப். 21—

பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தால், பொருளாதார துறையில் நெருக்கடியில்லாமல் பெப்சு ராஜ்ய நிர்வாகம் செய்யமுடியாது என நிதி அமைச்சர் குறிப்பிட்டார்.

குல்லாய் கூடாதென்றதற்கு குண்டு பரிசு பெற்ற கெமால்!

— (:) —

முகமூடிக்கு முடிவு கட்டிய மக்கள் தலைவன்

தஞ்சை சமூக சீர்திருத்த மாநாட்டில் என். எஸ். இளங்கோ பேச்சு

' எல்லாப் பெற்றோரைப் போன்றே கமாலின் பெற்றோரும் தன் மகன் ஒரு மௌல்வியாக வேண்டுமென ஆசைப்பட்டனர்; ஆனால் கமாலின் குறுகுறுத்த உள்ளம் அவனை ஒரு இராணுவக் கல்வி பெற்ற வீரனாக ஆக்கியது; பின்னர், இராணுவ சேவை யாவது செய்தானா என்றால் அதுவும் இல்லை; துருக்கிய சம்ராஜ்யத்தின் சகோதரிகள், நாகரீகத்தைக் கேட்டறியாதவர்களாய், தங்கள் உள்ளத்திலே மூடப் பழக்க வழக்கங்களை நிரப்பி வைத்திருப்பதை, தான் இராணுவ வீரனாக இருக்கும்போதே கண்டான். அதன் விளைவு—தனது நாட்டு சகோதரிகளுக்கு ஒரு பெரும் சமுதாய விடுதலை வாங்கித் தரும் எண்ணத்துடன், 'மக்கள் கட்சி' என்ற பெயரில் ஒன்றை நிறுவி அதன் தலைவனாகவும் ஆனான்."

"தனது நாட்டு சகோதரிகள் எல்லாம், தங்கள் முகத்தையும் கூந்தலையும் முகமூடியால் மறைத்துக்கொள்ளும் மூடப் பழக்கத்தை ஒழிக்க, கமால் பல கஷ்ட நஷ்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.'

'. தன் நாட்டு மக்கள் எப்போதும் 'பெஸ்' என்ற குல்லாவை அணிவது அநாகரீகமானது என்று எண்ணினான். அதற்காகத் தன் நாட்டு மக்களைப் பார்த்து "உங்கள் அழகைக் கெடுக்கும் இந்த அநாகரிகச் சின்னமான 'பெஸ்' குல்லாவை எடுத்து எறியுங்கள்" என்றான். வெகுண்டெழுந்தனர் துருக்கியர். "எங்கள் மதச் சின்னத்தை எடுப்பதா? மதத்தை— அது போதிக்கும் மதச் சடங்குகளை ஒரு போதும் கைவிடோம். மதத்தை அவமதித்து மௌல்விகளின் கோபத்திற்கு ஆளாகச் சம்மதியோம்' என வீறு கொண்டெழுந்தனர். அரிபேயே என்பவன், 'பெஸ் குல்லாவை எடு' என்று சொன்ன குற்றத்திற்காக கமாலின்மீது குண்டு ஒன்றை வீசினான். அந்தக் குற்றத்திற்காக அரிபேயே மரண தண்டனை விதிக்கப்பட்டான்."

"இப்படியாக துருக்கிய நாட்டினரின் நல் வாழ்வைக் கவ்விக்கொண்டிருந்த பழமை எண்ணங்களையும் மூடப் பழக்க வழக்கங்களையும் அகற்றி அவர்களுக்குப் புதியதோர் நாகரீக வாழ்வு தர கமால் பாட்சா செய்த அரும் பணிகள்—அந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது அவன் பட்ட கஷ்ட நஷ்டங்களெல்லாம் நமது திராவிட சமுதாயத்தைச் சீர்திருத்த முற்பட்டிருக்கும் நமக்கு நல்ல அனுபவ ஒளி விளக்குகள். அத்தகைய சமூக சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கை வரலாறுகள் நமக்கு நல்ல பாடங்கள்."

—இவ்வாறு, 10—4—54-ல் நடைபெற்ற தஞ்சை மாவட்ட சமூக சீர்திருத்த மாநாட்டில், சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் குறிப்பிட்டார்.

தோழர் என். எஸ் இளங்கோ தன் சொற்பொழிவைத் தொடர்ந்து ஆற்றியபோது சொன்னதாவது:—

"தி மு. கழகம் இத்தகைய சமூக சீர்திருத்த மாநாடுகளை, எத்தனையோ இன்னல்களுக்கிடையில் நடத்துவது நாட்டவருக்கு நல்ல மகிழ்வைத் தரக்கூடியது தான். இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளெல்லாம் சமூக சீர்திருத்தத்தை தங்கள் அறிவுக்கு எட்டிய காரணங்களைக் காட்டி உதாசீனம் செய்கின்றன. நாம்தான், எத்தனை அரசியல் மாற்றங்களும், பொருளாதார புனரமைப்புகளும் சீர்கேடடைந்துள்ள சமுதாயத்தை சிறிதளவும் சீர்செய்ய இயலாது என்கிற உண்மையை உணர்ந்து சமுதாயப் பணிபுரிந்து வருகிறோம்.

அன்பர்களின் உறைவிடமாய் பழமைப் பாசியின் இருப்பிடமாய் விளங்கிய துருக்கியை கமால்பாட்சா சீர்திருத்த முற்பட்டான்.

இந்த மாநாட்டிலே அந்தச் செம்மல் கமால்பாட்சாவின் சமுதாயப் பணி குறித்து உங்களுக்குச் சொல்ல பணிக்கப்பட்டிருக்கிறேன்.

துருக்கியின் தலைநகராக, கான்ஸ்டாண்டி நோபிளைக் கொண்டு கலீபா ஆண்டு வந்தான்.

மக்கள் கட்சியின் தலைவனான கமால், மதத் தலைவனான கலீபாவிற்கு அடிமையில் ஆழ்ந்திருந்த மக்கள் வரி தருவதை எதிர்த்தான். சுல்தான் அங்கா(மகுதி) வுடன் தொடர்பு உடையவனாக இருப்பதையும் அங்காவின் தலைவனாக காஜி இருப்பதையும், கமால் கண்டித்தான்.

தன்னுடைய நாட்டு மக்களை அவர்கள் நாகரிக மேம்பாடு அடையாததால் மேலை நாட்டினர் எள்ளி நகையாடுவதையும் காணச் சகியாதவனானான், கமால்! துருக்கிய நாட்டினர் துருக்கியர்களாகவே வாழ வேண்டுமென ஆசைப்பட்டான்.

தன் நாட்டின் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிள் மதத்தின் அடிப்படையிலே பெயரிடப்பட்டிருப்பதைக் கண்ட கமால் அதன் பெயரை இஸ்தாம்புல் என ஆக்கினான். கமால் என்ற தன்னுடைய பெயர்கூட அந்த வகையதே என்பதை அறிந்து கெமால் என மாற்றிக்கொண்டான் அட்லிபாயின் என்பதை எத்திபாப்ளே ஆக்கினான்.

தன்னுடைய நாட்டிற்கு புதியதோர் மொழி தேவை என்பதை உணர்ந்து லத்தின் மொழியை அரசு மொழியாக்க பெரும்பாடு பட்டான். அரசு அவையிலே எழுதப்பட்டிருந்த குரான் வாக்கியங்களை அழித்து ஒழித்தான்."

ஓயாமல் குடித்ததால் உபத்திரவம் மறைந்தது?

டோக்கியோ, ஏப். 22—

அணுக்கிளர்ச்சி வியாதிக்கு 'மதுசாரம்'தான் சரியான மருந்தென தன்னுடைய பரிசோதனையில் தெரிந்ததென சர்வகலாசாலை பேராசிரியர் ஒருவர் கூறினார்.

1945-ல், ஹிரோஷிமாவில் அணுகுண்டு வெடித்தபோது அதன் கிளர்ச்சி அலைகளால் பாதிக்கப்பட்ட மூவர் அதிகமாகக் குடித்ததினால் ரோமம் கொட்டுவது, பல் ஆடுவது, சருமத் தழும்புகளும் மறையத் தொடங்கின என்று அவர் குறிப்பிட்டார்.

ஆயிரத்திற்கு அதிகமான அரசியல்வாதிகள், வியாபாரிகள் கைது

— (:) —

சர்க்கார் மானியம் பெறுவதற்கு கப்பல் கம்பெனிகள் கொடுத்த லஞ்சம்

சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்?

டோக்கியோ, ஏப். 22—

ஆயிரத்திற்கு அதிகமான வியாபாரிகளையும், அரசியல் வாதிகளையும், கப்பற் கட்டும் தொழிலில் ஏற்பட்ட லஞ்ச ஊழலின் காரணமாக, ஜப்பான் சர்க்கார் கைது செய்து காவலில் வைத்துள்ளது. இப்போழுது ஆட்சிப் பொறுப்பில் உள்ள லிபரல் சர்க்காரைக்கூட கவிழ்ந்துவிடும்போல் தெரிகிறது.

வலதுசாரி இடதுசாரி சோஷலிஸ்ட் கட்சியினர் சர்க்கார்மீது நம்பிக்கையின்மை அறிவித்து ஒரு தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர்.

கப்பல் கட்டும் தொழிலுக்கு சர்க்காரிடமிருந்து மானியம் பெறுவதற்காக, சர்க்கார் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துள்ளதாக வியாபாரிகள்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

20 நாட்களுக்கு அதிகமாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள், தாங்கள் கொடுத்த பணம் லஞ்சமல்ல எனவும், கட்சிக்குக் கொடுத்த நிதி எனவும் கூறுகின்றனர்.

சர்க்கார் அமைச்சர்களின் ஆதரவையும், அதிகாரிகளின் ஆதரவையும் பெறுவதற்காக, கப்பற் தொழில் சீமான்கள், அழகிய நங்கையர்களைக் கொண்ட கேளிக்கைகளைக்கூட நடத்தியுள்ளனர்.

மாணவர் கண்டனம்

பிரசாத் வரவேற்பில் சம்பவம்

பாட்னா, ஏப். 21—

குடி அரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத், பாட்னாவில், இந்தி சாகித்ய சம்மேளனக் கூட்டத்தில், ஆண்டுவிழா வைபவத்தில் கலந்துகொண்ட போது, உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்ட 200 மாணவர்கள் விழா நடைபெற்ற இடத்தின் எதிரே கூடி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சுகாதார வசதிகள் விஸ்தரிப்பு

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம்!

புதுடில்லி, ஏப். 22—

மாநில சுகாதார காரியதரிசிகள்—வைத்திய அதிகாரிகளின் மாநாட்டை மத்திய சுகாதார மந்திரி இங்கு ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது;—

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சுகாதார அபிவிருத்தித்திட்டங்களின் விபரங்களை விவாதித்து அவைகளை அமுல் செய்யவே இம்மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

12 வைத்தியக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள போதனா ஆஸ்பத்திரிகளில் விசேட உணவு சமையலறைகளை அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 3 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சமூக நல திட்டங்களுக்காக 600 சுகாதார விசிட்டர்களுக்கு பல்வேறு மாநிலங்களில் 8 சுகாதாரப் பள்ளிகளிலும், குல்லியல் லேடி ரீடிங் சுகாதார பள்ளியிலும் பயிற்சி அளிக்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 8 சுகாதாரப்பள்ளிகளுக்கு உதவி புரிய ரூ 13,28,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த 3½ ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் 300 மருத்துவ பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இச்செலவில் ரூ 6 லட்சம் மத்திய சர்க்காரும், 3½ லட்சம் மாநில சர்க்கார்களும் பகிர்ந்து கொள்ளும்.

இவை தவிர சுமார் 400 நர்சர்—மருத்துவப் பெண்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மத்திய சர்க்கார் 10 லட்சம் செலவிடும்.

சுத்தமான குடி தண்ணீர் சப்ளை, சுகாதாரத் திட்ட விஸ்தரிப்பு ஆகியவைகட்கு இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தில் முதலிடம் அளிக்கப்படும் என்றும், அவ்வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டதாகவும், அதன் மூலம் 50 சதவிகித நோய்கள் ஒழியும் என்றும் குறிப்பிட்டார்.

புதுடில்லி, ஏப். 22—

இந்தியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் ஜார்ஜ் வி. ஆலென் அடுத்த வாரத்தில் வாஷிங்டன் பிரயாணமாகின்றார்: இந்தியாவுக்கு அதிக பொருளாதார உதவியளிக்க வற்புறுத்தவே அவர் வாஷிங்டன் செல்வதாகத் தெரிகிறது.

---

2 பவுன் முதலில் 17 ஆயிரம் பவுனை எப்பமிட்ட எத்தன்!

அரிய முயற்சிக்குப் பிறகு 1000 பவுன் கிடைத்தது

புதுடில்லி, ஏப். 23—

இரண்டு பவுன் மூலதனம் கொண்ட ஒரு போலி பிரிட்டிஷ் கம்பெனி, லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனரின் அலுவலகத்திலிருந்து ரூ. 17,000 பெற்றுக் கொண்டு ஏமாற்றிய சம்பவம் பற்றிய விவரங்கள் ராஜாங்க சபையில் வெளியிடப்பட்டது. பண ஒதுக்கல் மசோதா விவாதத்தின் போதுதான் அத்தகவல் வெளியிடப்பட்டது.

டப்ளினில் ஒரு வீடு வாங்க முன்பணமாக அது கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் அப்பணத்துடன் அக்கம்பெனி 'தலைமறைவாகி' விட்டதாகவும் டாக்டர் கட்ஜு தெரிவித்தார்.

லண்டனில் வீடு வாங்க அப்பணம் வழங்கப்பட்டது என்றும், டப்ளினில் அல்லவென்றும் அயல் நாட்டு மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி தெரிவித்தார்.

லேசர் என்பவர்தான் அக்கம்பெனியின் ஒரே 'டைரக்டர்' என்றும், 17,000 பவுன் அட்வான்சைப் பெற்றுகொண்டபின் அவர் மறைந்துவிட்டதாயும், மிகச் சிரமப்பட்டு, 1,025 பவுன் மீட்கப்பட்டிருப்பதாகவும் திருமதி மேனன் கூறினார்.

★★

சேலம் மாவட்ட தி.மு.க. மாநாடுகள்

சேலம் V. மார்க்கெட்டில் அமைத்துள்ள பரசுராமன் பந்தலில் — வள்ளியப்பன் அரங்கில் நடைபெறும்.

மே 1: சனிக்கிழமை	மே 2: ஞாயிற்றுக்கிழமை
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: தோழர் ப. உ. சண்முகம்	தலைவர்: தோழர் இரெ. இளம்வழுதி, M. A, B. L.
துவக்குபவர்: தோழர் கோகுல கிருஷ்ணன், B. A., B. L.	துவக்குபவர்: மதுரை தோழர் எஸ். முத்து

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரு நாட்களிலும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும்

'காதல் ஜோதி,' 'ஓர் இரவு' நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்:—வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி: ரூ. 3; ஆதரவாளர்: ரூ. 2; பார்வையாளர்: ரூ 1; பெண்கள்: அணா 8.

—வரவேற்புக் குழுவினர்.

★★

சென்னை நகரை தனி ராஜ்யமாக்க சம்மதியோம்!

— (:) —

தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டுக்கே!

மாநில புனரமைப்புக் கமிஷனிடம் தமிழ்நாடு காங்கிரஸ் மகஜர்

சென்னை, ஏப். 24—

சென்னை நகரம் தமிழ் நாட்டின் ஒரு பகுதி என்பதைக் கமிட்டி வற்புறுத்திக் கூற விரும்புகிறது; அதைத் தனியாகப் பிரித்து 'சி' பிரிவு ராஜ்யமாக்கும் எந்த முயற்சியும் மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென்று எடுத்துக்கூற விரும்புகிறது; சென்னை நகரில் தமிழ் பேசுவோரின் தொகையே பெரும்பான்மையாகும்; தெலுங்கு பேசுபவர்களின் தொகை 16 சதவிகிதம்தான்; சென்னை நகர் விஷயத்தில் தமிழர்களின் உரிமையை ஜே. வி. பி. அறிக்கையும், இந்திய சர்க்காரும் பூரணமாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன; இந்த நிலையில் சென்னை நகரை, 'சி' பிரிவு ராஜ்யமாக்கும் முயற்சி முற்றிலும் தவறானதும் நியாயமற்றதுமாகும்," என ராஜ்ய புனரமைப்பு கமிஷனிடம் தமிழ் நாடு பிரதேச காங்கிரஸ் கமிட்டி சமர்ப்பித்துள்ள மனுவில் குறிப்பிட்டிருக்கிறது

அக்குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"சித்தூர், திருத்தணி முதலிய பகுதிகளில் சென்னை மாநிலத்திற்கும் ஆந்திர மாநிலத்திற்குமிடையில் எல்லையை நிர்ணயிப்பது இக்கமிஷனின் அதிகார எல்லைக்குட்பட்டதல்ல; அதுபற்றி எல்லைக் கமிஷன் மூலம் முடிவு செய்யப்படும்.

"ஆந்திரா, மைசூர், திரு—கொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள தமிழ்ப் பகுதிகளை மாநிலத்தில் உள்ள தமிழ்ப் பகுதியுடன் சேர்த்து சென்னை மாநிலமென்ற பெயருடன் தனி மாநிலமாக அமைக்க வேண்டும்.

திரு—கொச்சியில் தமிழ் பேசப்படும் பகுதிகளாகிய தோவாளை, அகஸ்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை, சித்தூர், பீர்மேடு, தேவிகுளம், நெய்யாற்றங்கரை ஆகிய தாலூகாக்கள் மேற்படி புதிய மாநிலத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று கமிட்டி கருதுகிறது."

ஏகபோக உரிமையினால் இன்னல்களே ஏற்படும்

தவறான எண்ணத்திற்கு இடமிட வேண்டாமென்கிறார் காஷ்மீர் பிரதமர்

லட்சுமணபுரி, ஏப். 23—

"உருதுவைத் தங்கள் ஏகபோக உரிமையாக முஸ்லிம்கள் கருதிவிடக் கூடாது; அம்மாதிரியான மனோபாவம் தவறான எண்ணத்தை உண்டுபண்ணுவதுடன், மொழிக்கே தீங்கை விளைவித்துவிடும்; கூட்டு முயற்சியினால்தான் அதை வளர்க்க வேண்டும்,"

என்று, இந்திய முஸ்லிம் மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையில், காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகமது குறிப்பிட்டு, தொடர்ந்து கூறியதாவது:—

"வகுப்பு வேற்றுமைகளை மறந்து, நாட்டில் சமாதானமும், சுதந்திரமும் நிலைப்பதற்கு இந்திய முஸ்லிம்கள் உதவ வேண்டும்; பாகிஸ்தான் சர்க்காரின் கொள்கைகள் காரணமாக ஒரு முக்கியமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது; அமெரிக்காவுடன் செய்துகொண்ட இராணுவ ஒப்பந்தத்தினால் ஏற்படும் விளைவு மகத்தானதாக இருக்கப் போகிறது," என்றார்.

சென்னை சர்க்கார் கோரிக்கை நிராகரிப்பு

மேலும் இரு நீதிபதிகளை ஏற்றுக்கொள்ள ஆந்திரா மறுத்து விட்டது

கர்நூல் ஏப் 23—

சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து ஏற்கனவே மூன்று நீதிபதிகளை ஆந்திர அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அம்மூவர் நீங்கலாக மேலும் இருவரை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சென்னை அரசாங்கம் ஆந்திராவை கேட்டிருந்தது. அதற்கு ஆந்திரா மறுத்துவிட்டது.

சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து ஆந்திரம் ஏற்றுக்கொண்ட மூன்று நீதிபதிகள் வருமாறு:—

நீதிபதிகள் கே. சுப்பாராவ், சந்திரா ரெட்டி, உமாமகேஸ்வர அய்யர்.

மந்திரி தேர்தல் அப்பீல் தள்ளுபடி

புதுடில்லி, ஏப். 24—

"கேந்திரப் பாரா தொகுதியிலிருந்து ஒரிசா சட்டசபைக்குத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாதென்று கட்டாக் தேர்தல் டிரிபூனல் தீர்ப்பளித்ததன் பேரில் ஒரிசா சர்க்கார் உள்நாட்டு மந்திரி நிலபந்து சாகு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டிருந்தார். அப்பீலை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது."

சொற் பயிற்சிக் கூட்டம்

25—4—54 ஞாயிறு காலை 10-மணி அளவில் எண் 79. பாவி கோயில் தெருவிலுள்ள இராயபுரம் 2-வது வட்ட திமுகழகக் கட்டிடத்தில் 'நாகரிகம்' என்பது பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

நடக்க இருப்பவை

★

திருமணம்

25—4—54 ஞாயிறு காலை 8-மணி அளவில், சென்னைத் தொண்டையார் நகர் பெரிய பாளையத்தம்மன் கோவில் தெரு 13-வது எண் இல்லத்தில் தோழர் பொன்னுச்சாமிக்கும்—தோழியர் எம். பாக்கியவதி அம்மாளுக்கும், காஞ்சி-மணிமொழியார் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். 'திருந்திய திருமணம்' குறித்து தோழியர் கிருஷ்ணபாய், தோழர்கள் முத்துசாமி, இன்மொழி, மூகவை-ஆர். எஸ் பாண்டியன் பேசுவர்.

★

பிரெஞ்சிந்திய இணைப்பு ஆதரவுக் கூட்டம்

நுங்கம்பாக்கம் அகலாத்தம்மன் கோயில் எதிரில் 25-4-54 ஞாயிறு மாலை 5-மணிக்குத் தோழர் எஸ். பி ஆதித்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ஐ மாயாண்டிபாரதி, வி ஆர் ராதாகிருஷ்ணன், பி கே இராமன், என். ஆர் தேவராசன் எஸ். சங்கரய்யா, எஸ். விஜயலட்சுமி, வ. சங்கரநாராயணன், டி கிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

★

திராவிட இளைஞர் மன்ற வளர்ச்சி நிதிக் கூட்டம்

25—4—54 ஞாயிறு காலை 9-மணிக்கு மதுரை இம்பீரியல் சினிமா கட்டிடத்தில் திராவிட இளைஞர் மன்ற வளர்ச்சி நிதிக்காக கேப்டன் டி. ஆர். முத்துரெங்கம், எம்.பி., பி.எஸ். தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் 'சிந்தித்தோம், செய்தோம்' என்னும் பொருள் பற்றித் தோழர்கள் டி கே. சீனிவாசன், (தாமரைச் செல்வன்) சக்திமோகன், என். கே. குருசாமி, மது-இ பழனியப்பன் மற்றும் பலர் பேசுவர்.

'காங்கிரசை எதிர்த்துப் போராடுவதாக வாக்களித்தோம்!'

'அதை மீறினது துரோகச் செயலாகும்'

உழைப்பாளர் கட்சித் தலைவருக்கு முக்கிய உறுப்பினர் கண்டனம்

திண்டிவனம், ஏப். 23—

"நாட்டில் உள்ள பஞ்சம், பட்டினிகளுக்குக் காரணம் காங்கிரஸ் ஆட்சியேதான்! இதை ஆச்சாரியாரால் தீர்க்க முடியவில்லை; வந்திருக்கும் காமராஜராலும் முடியாது; எதிர்க் கட்சி பலமாக இருந்தால்தான், பொது மக்களுக்கு மந்திரி சபையால் ஏற்படும் கஷ்டங்களைத் தீர்க்க முடியும். ஆச்சாரியாரின் ஆட்சியின் போது, எதிர்க் கட்சி பலமாக இருந்ததால்தான், புகையிலை வரி போன்றவைகளைத் தடுக்க முடிந்தது. அதனால்தான் புதிய கல்வி திட்ட விஷயத்தில் ஆச்சாரியார் தன் பதவியை விட்டே விலக வேண்டிய அவசியமேற்பட்டது."

— இவ்வாறு, எஸ். எஸ். ராமசாமி படையாச்சி போக்கு பற்றி ஆலோசிப்பதற்காக செஞ்சியில் நடைபெற்ற வன்னியர்கள் கூட்டத்தில் பேசுகையில், உழைப்பாளர் கட்சி பிரமுகரான கோபால கவுண்டர் எம்.எல்.ஏ, கூறினார்.

அவர் மேலும் கூறினார்.

"இப்போது காங்கிரஸ் சாகும் கட்சி ஆகிவிட்டது; அதில் ராமசாமி படையாச்சி சேர்ந்திருப்பது கிணற்றில் மூழ்கி சாகிறவன் அணைக்குச் சென்றவனையும் இழுத்துக் கொண்டு மூழ்குவதற்கு சமமாகிறது; காங்கிரசை எதிர்த்து போராடுவோம் என்று மக்களிடம் வாக்குறுதி அளித்துவிட்டு, இப்பொழுது காங்கிரசில் சேருவது துரோகச் செயலாகும்."

"வட ஆற்காடு மாவட்டத்தில் வன்னியருக்குத் துரோகம் செய்த மாணிக்கவேலர் கடந்த இரண்டாண்டுகள் மந்திரியாக இருந்து என்ன சாதித்தார்? இதேபோல் ராமசாமி படையாச்சியால் என்ன சாதிக்க முடியும்? சொந்த இனத்தைக் காட்டிக் கொடுப்பதைவிட வேறு என்ன அவரால் செய்ய முடியும்?"

இறுதியில், மக்களைக் கேட்காமல், எஸ். எஸ். ராமசாமி படையாச்சி செய்த முடிவை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், இவ்விஷயத்தில் கோபால கவுண்டரை ஆதரிப்பதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாக்கு இறக்குமதி வரி குறைவு

மேலும் வரிச் சலுகைகள்

புதுடில்லி, ஏப் 22—

100 டன்னுக்கு அதிகப்படாமல் சலவை சோப்பும் 50 டன்னுக்கு அதிகப்படாமல் உடல் ஸ்நான சோப்பும் உற்பத்தி செய்யும் சோப்பு பாக்டரிகளுக்கு 'எக்ஸைஸ்' வரி கிடையாதென்றும், வரி விதிக்கக்கூடிய சோப்புப் பாக்டரியில் தயாராகும் முதல் 125 டன் சலவை சோப்புக்கும், 25 டன் உடல் ஸ்நான சோப்புக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் சபையில் நிதி மந்திரி அறிவித்தார்.

49 தொழிலாளிகளுக்கு மேல் அமர்த்திக் கொள்ளாததும், 2 குதிரை சக்திக்கு மேல் விசை உபயோகிக்காததுமான பாதரட்சைத் தொழிற்சாலைகளுக்கும் 'எக்ஸைஸ்' தீர்வை கிடையாது.

பாக்கு மீது ராத்தலுக்கு ரூ 1—1—3 இறக்குமதி தீர்வை விதிக்க உத்தேசித்திருந்தார்; அதை ராத்தலுக்கு ரூ 1—0—6 என மாற்றிவிட்டதாக அறிவித்தார்.

இறக்குமதி வியாபாரச்சலுகை சம்பந்தமான உடன்பாட்டுக்குத் தகுந்தபடி வரம்பு மீறிச் சென்றதை சரிப்படுத்தவே இச்சலுகை என்றும், சலுகை விகிதம் ராத்தலுக்கு ஒரு ரூபாய் தான் என்றும் அவர் விளக்கிக் கூறினார்.

ஏழாண்டு ஆட்சியில் ஏற்பட்ட பைத்தியம்!

— (:) —

மக்கள் மன்றத்தில் டாக்டர்களாவோம்!

— (:) —

நேருவுக்கு நெடுஞ்செழியன் தெளிவுரை!

பிரான்மலை, ஏப். 20—

"நேரு பண்டிதரே! நாங்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியவர்கள்தான்—நீர் நினைப்பது போல — பைத்தியக்காரர்களாக அல்ல—டாக்டர்களாக!"

"நேருவே! உன் ஏழு ஆண்டு ஆட்சியில் மக்களைப் பைத்தியக்காரர்களாக ஆக்கிவிட்டீர்; அந்த பைத்தியத்தைப் போக்கவே நாங்கள் மக்கள் மன்றத்திலே உலவி வருகிறோம்."

"நேரு — பண்டிதர்தான்; அறிவாளிதான்; ஆனால், பஸ்ஸில் விபூதி விழுந்துவிடும், இவருக்கும் என்ன வித்தியாசம்?"

—என்று, நேற்று மாலை, பிரான்மலை தேரடி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தோழர் இரா நெடுஞ்செழியன் பேசினார்.

பிரான்மலை அண்ணா மன்ற சார்பில், நேற்று மாலை காந்தி சதுக்கத்தில் இருந்து 100 சைக்கிள்களும், 2000 பொது மக்களும் கலந்து கொண்ட மாபெரும் ஊர்வலம் தேரடி மைதானம் வந்த பின், கா. ரெத்தினம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஞா. திபாக அரசு, இராம-வெள்ளையன் பேசிய பின் இரா. நெடுஞ்செழியன் பேசினார்.

பிரான்மலை அறிஞர் அண்ணா மன்றம், காளாப்பூர் தி. மு. கழகம், கிருங்காகோட்டை தி. மு. கழகம், சிங்கம்புணரி தி. மு. கழகம், திருக்கோளக்குடி கலைஞர் நாடக மன்றம் ஆகியவை சார்பில், மலர் மாலைகளும், வரவேற்பிதழ்களும், கைத்தறித் துண்டுகளும் அளிக்கப்பட்டதுடன், சத்துக்குடி வழக்கு நிதிக்கு ரூ 4—9—3 தோழர் நெடுஞ்செழியனிடம் அளிக்கப்பட்டது.

காரைக்கால், ஏப். 24—

புதுவையில் பெட்ரோல் காலன் ரூ 4—4—0 வீதம் கடைகளின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிகிறது.

ரிக்ஷாக்கள் வேண்டாம்!

நகர சபை முடிவு

செகந்திராபாத், ஏப் 22—

செகந்திராபாத்தில் ரிக்ஷாக்கள் ஓடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற யோசனையை செகந்திராபாத் நகர சபை பெரும்பான்மையான மெஜாரிட்டியினால் நிராகரித்தது. தற்பொழுது ரிக்ஷா இழுப்பவர்கள் ஐதராபாத் நகரில் மட்டும்தான் ரிக்ஷாக்கள் இழுக்கின்றனர்.

புதிய கல்வித் திட்டம்

சட்டசபை காங்கிரஸ் கட்சி விவாதிக்கும்

சென்னை, ஏப் 23—

மே. 5-ந் தேதியன்று சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் புதிய கல்வித் திட்டம் பற்றி விவாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குப்பு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,